# சென்னை சர்வதேச விமான நிலையத்தை நவீனமயமாக்கப் போவது எப்போது?

## மக்களவையில் – தயாநிதி மாறன் எம்.பி. கேள்வி!

புதுடெல்லி, ஜுலை 26-

சென்னை சர்வதேச விமான நிலையத்தை மேம்படுத்துவதற்காக நடைபெற்றுவரும் பணிகள் தாமதமாவதற்கான காரணங்கள் என்ன என்றும் நிறுத்தப்பட்ட சேவைகளை மீண்டும் தொடங்குவதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் விவரங்கள் என்ன என்றும் நாடாளுமன்றத்தில் விமானப் போக்குவரத்துத் துறைஅமைச்சர் கிஞ்சராபு ராம்மோகன் அவர்களிடம் கழக நாடாளுமன்றக் குழுத் துணைத்தலைவரும் மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினருமான தயாநிதி மாறன் பல கேள்விகளை எழுப்பியுள்ளார்.



அதன் விவரங்கள் வருமாறு:

இந்தியாவின் மிகப் பழமையான மற்றும் அதிக பயணிகள் போக்குவரத்து கொண்ட விமான நிலையங்களில் ஒன்றாக விளங்கும் சென்னை சர்வதேச விமான நிலையத்தின் பயணிகள் எண்ணிக்கை மற்றும் தேசிய அளவிலான தரவரிசை கடந்த சில ஆண்டுகளில் குறைந்து வருவதற்கான காரணங்கள் என்ன? அதுகுறித்து ஒன்றிய அரசு ஆய்வு செய்துள்ளதின் விவரங்கள் என்ன?

கடந்த ஐந்து ஆண்டுகளில் சென்னை சர்வதேச விமானநிலையத்தின் பயணிகள் கையாளும் திறனை அதிகரித்தல், பயணிகள் வசதிகளை மேம்படுத்துதல், விமான நிலைய உள்கட்டமைப்பை நவீன மயமாக்குதல் மற்றும் ஒடுபாதை நெரிசலைக் குறைத்தல் ஆகிய நோக்கங்களுக்காக மேற்கொள்ளப்பட்ட திட்டங்கள் என்ன? அவற்றிற்காக செலவிடப்பட்ட நிதி மற்றும் திட்டங்களின் தற்போதைய நிலை விவரங்கள் என்ன?

விமான வழித்தடங்கள் ரத்து செய்யப்படுதல், விமான இயக்கத்திற்கான கால இடைவெளி (slot) கிடைப்பதில் உள்ள பற்றாக்குறை மற்றும் உள்கட்டமைப்புச் சிக்கல்கள் ஆகியவை சென்னையின் உள்நாட்டு மற்றும் சர்வதேசவிமான இணைப்பில் ஏற்படுத்தியுள்ள பாதிப்பை அரசு ஆய்வு செய்துள்ளதா? அவ்வாறாயின் நிறுத்தப்பட்ட சேவைகளை மீண்டும் தொடங்குவதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் விவரங்கள் என்ன?

சென்னை சர்வதேச விமான நிலையத்தில் தற்போது நடைபெற்று வரும் ஒருங்கிணைந்த முனைய (Integrated Terminal) விரிவாக்கத் திட்டம் மற்றும் ஓடுபாதைக்கு (Runway) இணையாகச் செல்லும் பிரத்யேகப் பாதையான டாக்ஸிவே (Parallel Taxiway) திட்டங்களை நிறைவு செய்வதில் ஏற்படும் கால தாமதத்திற்கான காரணங்கள் மற்றும் அவற்றை நிறைவு செய்வதற்காக நிர்ணயிக்கப்பட்டுள்ள காலக்கெடு என்ன?

தமிழ்நாட்டின் முக்கிய விமானப் போக்குவரத்து நுழைவாயிலாக விளங்கும் சென்னை சர்வதேச விமான நிலையம், போதுமான உள்கட்டமைப்பு மற்றும் திறன் மேம்பாட்டின் மூலம் பயணிகள், விமான சேவைகள் மற்றும் முதலீடுகளை பிற பெருநகர விமான நிலையங்களிடம் இழக்காமல், எதிர்காலத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையிலும், உலகத் தரத்தில் போட்டித்தன்மையுடன் செயல்படும் வகையிலும் உருவாக்க ஒன்றிய அரசு வகுத்துள்ள நீண்டகால செயல் திட்டம் மற்றும் கொள்கை என்ன?

இவ்வாறு அவர் கேள்வி எழுப்பினார்.

---

வீரம், தைரியம், ஆவேசம், வாய்ச் சவடால் எல்லாம் சினிமாவில் மட்டும்தானா CM Sir?

# தமிழ்த்தாய் வாழ்த்துக்கு சிறுபங்கம் ஏற்பட்டாலும் தமிழ்நாட்டு மாணவர்கள் கிளர்ந்தெழுவர்!

## நெல்லை மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கு ஆளுநரின் மிரட்டலை அடுத்து – முன்னாள் பேரவைத் தலைவர் மு.அப்பாவு கண்டனம்!

நெல்லை.ஜுலை.26-

முன்னாள் சட்டப்பேரவைத் தலைவர் மு. அப்பாவு தனது எக்ஸ் வலைதள பதிவில் கூறியிருப்பதாவது.

நெல்லை மனோன்மணிய சுந்தரனார் பல்கலைக்கழக 33 வது பட்டமளிப்பு விழாவில் முதலில் வந்தே மாதரம் தொடர்ந்து தேசிய கீதம் இறுதியில் தமிழ்த்தாய் வாழ்த்து இசைக்கப்பட வேண்டும், மீறினால் துணைவேந்தர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஆளுநர் மாளிகை துணைவேந்தருக்கு பகிரங்க மிரட்டல் விடுத்திருப்பது வன்மையாகக் கண்டிக்கத்தக்கது.



தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடும் விவகாரத்தில் வழிகாட்டுதல் தாருங்கள் என்று பிரதமர் மோடியிடம் கெஞ்சிக் கேட்டுப் பெற்ற நடைமுறை இதுதானா CM sir.

2025 ஆம் ஆண்டு அப்போதைய குடியரசு துணைத் தலைவர் ஜெகதீஷ் தன்கர் தலைமையில் துணைவேந்தர்கள் மாநாட்டை ஆளுநர் ஆர். என்.ரவி ஊட்டியில் கூட்டிய போது, அன்றைய முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உச்சநீதிமன்றத் தீர்ப்பின்படி துணை வேந்தர்கள் நியமிக்கும் அதிகாரமும், அவர்களைக் கூட்டும் அதிகாரமும், மாநில அரசுக்கு தான் உண்டு, என்பதை சுட்டிக்காட்டி அந்த மாநாட்டிற்கு தமிழ்நாட்டில் உள்ள 32 பல்கலைக்கழக துணை வேந்தர்களையும் கலந்து கொள்ள விடாமல் செய்தவர் வீரமிக்க தேசியத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு இருந்த அதே வீரம், தைரியம், தில்லு, ஆவேசம், வாய்ச் சவடால் எல்லாம் தங்களுக்கு சினிமாவில் மட்டும் தானா CM sir?

தமிழ்த்தாய் வாழ்த்தை உலகிற்கு தந்த மனோன்மணியம் சுந்தரனார் பெயரில் அமைந்துள்ள பல்கலைக்கழகத்திலேயே அதனை மூன்றாம் தர வாழ்த்தாக மாற்ற முயற்சிக்கும் ஆளுநருக்குத் துணை போகும் முதல்வரே! தமிழ்நாட்டில் நடப்பது த.வெ.க. ஆட்சியா? அல்லது ஆர்.எஸ்.எஸ். ஆட்சியா?

தமிழ்த்தாய் வாழ்த்துக்கு சிறு பங்கம் ஏற்பட்டாலும் மாணவர்கள் தன்னெழுச்சி யுடன் பொங்கி எழுந்து, முதலில் தமிழ்த்தாய் வாழ்த்தை அரங்கத்திலே பாடுவார்கள், வெற்றிக் கொடி நாட்டுவார்கள். மூன்றாவதுதான் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாட வேண்டும் என்று நிர்பந்தித்தால் விளைவு விபரீதமாக இருக்கும் CMsir?

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

---

விவசாயிகளுக்கு மலிவு விலையில் உரம் வழங்கப்பட்டுள்ளதா?

# தமிழ்நாட்டில் உர விநியோகத்தின் நிலை என்ன?

## மக்களவையில் டாக்டர் எஸ்.ஜெகத்ரட்சகன் கேள்வி!

புதுடெல்லி, ஜுலை 26-

திராவிட முன்னேற்றக் கழக, அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர், டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன், ஜுலை 24, 2026 அன்று மக்களவையில், சர்வதேச சந்தையில் பாஸ்பேட்டிக் உரங்களின் விலை உயர்வு, டி.ஏ.பி. உரத்தின் போதிய கிடைப்புத் தன்மை, விவசாயிகளுக்கு மலிவு விலையில் உரம் வழங்குதல், இறக்குமதி ஏற்பாடுகள் மற்றும் தமிழ்நாட்டில் உர விநியோக நிலை குறித்து கேள்வி எழுப்பினார்.

ஒன்றிய அரசின் வேதிப்பொருட்கள் மற்றும் உரங்கள் துறை அமைச்சர் ஜகத் பிரகாஷ் நட்டா அளித்த பதில் பின்வருமாறு:

பாஸ்பேட்டிக் மற்றும் பொட்டாசிக் உரங்களுக்கு 2010 ஏப்ரல் 1 முதல் ஊட்டச்சத்து அடிப்படையிலான மானியத் திட்டம் நடைமுறையில் இருப்பதாகவும், இதன் கீழ் உரங்களின் அதிகபட்ச சில்லறை விலையை நிறுவனங்கள் நிர்ணயித்தாலும், சர்வதேச சந்தையில் உரங்கள் மற்றும் மூலப்பொருட்களின் விலை மாற்றங்கள், நாட்டின் ஊட்டச்சத்து தேவை, சமச்சீர் உரப் பயன்பாடு, மானியச் சுமை மற்றும் உரங்களின் விலையை கருத்தில் கொண்டு ஒன்றிய அரசு மானிய விகிதங்களை ஆண்டுதோறும் அல்லது அரையாண்டுதோறும் நிர்ணயித்து வருவதாகவும் அமைச்சர் தெரிவித்தார். இந்தத் திட்டம் தமிழ்நாடு உட்பட நாடு முழுவதும் எந்தப் பிராந்திய வேறுபாடுமின்றி ஒரே மாதிரியாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதாகவும் கூறினார்.

விவசாயிகளுக்கு 50 கிலோ டி.ஏ.பி. உர மூட்டை ரூ.1,350 என்ற மலிவு விலையில் தொடர்ந்து கிடைப்பதை உறுதி செய்ய, ஊட்டச்சத்து அடிப்படையிலான மானியத்துடன் கூடுதலாக டன் ஒன்றுக்கு 3,500 சிறப்பு உதவி வழங்கப்பட்டு வருவதாகவும், இதில் தொழிற்சாலையிலிருந்து விவசாயி வரை ஏற்படும் செலவுகள், சர்வதேச விலை உயர்வு அல்லது சரிவால் ஏற்படும் தாக்கம், அதிகபட்ச சில்லறை விலையில் உள்ள சரக்கு மற்றும் சேவை வரிக் கூறு, நிகர அதிகபட்ச சில்லறை விலையில் 4 சதவீத நியாயமான வருவாய் ஆகியவற்றுக்கான ஏற்பாடுகள் இடம் பெற்றுள்ளதாகவும் தெரிவித்தார். மேலும், 2025-26 ரபி மற்றும் கரீப் பருவங்களிலும், 2026 கரீப் பருவத்திலும், ஊட்டச்சத்து அடிப்படையிலான மானியத்திற்கு கூடுதலாக, இறக்குமதி செய்யப்பட்ட டி.ஏ.பி., உள்நாட்டில் தயாரிக்கப்படும் டி.ஏ.பி. மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட டி.எஸ்.பி. உரங்களுக்கும் இந்தச் சிறப்பு உதவி வழங்கப்பட்டு வருவதாகவும் கூறினார். 2026 கரீப் பருவத்தில் பாஸ்பேட்டிக் மற்றும் பொட்டாசிக் உரங்கள் தடையின்றி கிடைப்பதை உறுதி செய்வதற்காக, ஊட்டச்சத்து அடிப்படையிலான மானியத்திட்டத்தின் கீழ் 41,533.81 கோடி மானியம் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும், இது 202526 ரபி பருவத்திற்கான பட்ஜெட் தேவையை விட சுமார் 3,581 கோடி அதிகமாகும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

ஒவ்வொரு சாகுபடிப் பருவமும் தொடங்குவதற்கு முன்பு மாநில அரசுகளுடன் ஆலோசித்து மாநில வாரியாகவும், மாத வாரியாகவும் உரத் தேவையை மதிப்பீடு செய்து, அதன்படி மாநிலங்களுக்கு மாதாந்திர உர ஒதுக்கீடு வழங்கப்படுவதாகவும், ஒருங்கிணைந்த உரக் கண்காணிப்பு முறை மூலம் மானிய உரங்களின் நகர்வு நாடு முழுவதும் தொடர்ந்து கண்காணிக்கப்படுவதாகவும் அமைச்சர் தெரிவித்தார். மேலும், மாநில வேளாண் அதிகாரிகளுடன் வாரந்தோறும் காணொலி ஆய்வுக் கூட்டங்கள் நடத்தி தேவையான திருத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாகவும் கூறினார்.

தமிழ்நாட்டில் மாவட்ட வாரியாக உரங்களின் இருப்பு மற்றும் விநியோகம் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு, உர உற்பத்தி நிறுவனங்கள், உர விநியோக நிறு வனங்கள் ஆகியவற்றுடன் தொடர்ந்து ஒருங்கிணைப்பு மேற்கொள்ளப்பட்டு கூட்டுறவு மற்றும் தனியார் சில்லறை விற்பனை நிலையங்களில் போதுமான அளவு உரம் இருப்பதை உறுதி செய்து வருவதாகவும் அமைச்சர் தெரிவித்தார். தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம், தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனை இணையம் மற்றும் மாவட்ட அமலாக்க அதிகாரிகளுடன் தொடர்ந்து ஒருங்கிணைந்து செயல்பட்டு வருவதாகவும், உற்பத்தி, இறக்குமதி, போக்குவரத்து மற்றும் விநியோகம் தொடர்பாக அவ்வப்போது ஆய்வுக்கூட்டங்கள் நடத்தப்பட்டு, பற்றாக்குறை அல்லது தாமதம் ஏற்பட்டால் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு கூடுதல் விநியோகம் மேற்கொள்ள அறிவுறுத்தப்படுவதாகவும் தெரிவித்தார்.



2025-26 ரபி பருவம் மற்றும் 2026 கரீப் பருவத்தில் (2026 ஏப்ரல் 1 முதல் ஜுலை 19 வரை) தமிழ்நாட்டில் டி.ஏ.பி. உரம் போதுமான அளவில் கிடைத்துள்ளதாகவும், 2026 கரீப் பருவத்தில் 73,806 மெட்ரிக் டன் தேவை இருந்த நிலையில் 97,850 மெட்ரிக் டன் கிடைக்கப்பெற்று, 54,870 மெட்ரிக் டன் விற்பனையாகி, 42,960 மெட்ரிக் டன் இறுதி இருப்பு இருந்ததாகவும், 202526 ரபி பருவத்தில் 1,55,000 மெட்ரிக் டன் தேவைக்கு எதிராக 2,16,400 மெட்ரிக் டன் கிடைக்கப்பெற்று, 1,59,800 மெட்ரிக் டன் விற்பனையாகி, 56,600 மெட்ரிக் டன் இறுதி இருப்பு இருந்ததாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

மேலும், டி.ஏ.பி. மற்றும் பிற பாஸ்பேட்டிக் உரங்களின்விநியோகத்தை வலுப்படுத்த இந்திய உர நிறுவனங்களுக்கும் சவுதி அரேபிய நிறு வனங்களுக்கும் ஆண்டுதோறும் சுமார் 31 லட்சம் மெட்ரிக் டன் டி.ஏ.பி. வழங்குவதற்கான நீண்டகால ஒப்பந்தங்களும், ரஷ்ய நிறுவனங்களுடன் சுமார் 26.50 லட்சம் மெட்ரிக் டன் டி.ஏ.பி./என்.பி.கே. உரங்களை இறக்குமதி செய்வதற்கான ஒப்பந்தங்களும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவித்தார். தமிழ்நாட்டில் கோதுமை மற்றும் உருளைக்கிழங்கு சாகுபடி குறிப்பிடத்தக்க அளவில் இல்லாததால், பாஸ்பேட்டிக் உரங்களின் கிடைப்புத் தன்மை நெல், மக்காச்சோளம், கரும்பு, பருத்தி, பயறு, எண்ணெய் வித்துக்கள் மற்றும் தோட்டக்கலைப் பயிர்களின் வளர்ச்சிக்கும் விளைச்சல் அதிகரிப்பிற்கும் முக்கிய பங்காற்றி வருவதாக ஒன்றிய அரசின் வேதிப்பொருட்கள் மற்றும் உரங்கள் துறை அமைச்சர் ஜகத் பிரகாஷ் நட்டா, தி.மு.க. அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் எழுப்பிய கேள்விக்கு எழுத்துப்பூர்வமாக அளித்த பதிலில் தெரிவித்துள்ளார்.

---

விவசாயிகளின் நெல் மூட்டைகளை முழுமையாக கொள்முதல் செய்ய

# கூடுதல் கொள்முதல் நிலையங்களை உடனடியாக திறக்க வேண்டும்!

## மனிதநேய மக்கள் கட்சியின் தலைவர் பேராசிரியர் எம்.எச். ஜவாஹிருல்லா அறிக்கை!

சென்னை, ஜுலை. 26–

காவிரி டெல்டா மாவட்டங்களில் குறுவை அறுவடை உச்சக்கட்டத்தை எட்டியுள்ள நிலையில், அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் போதுமான அளவில் திறக்கப் படாததால் ஆயிரக்கணக்கான விவசாயிகள் தாங்கள் அறுவடை செய்த நெல்லை விற்பனை செய்ய முடியாமல் கடும் அவதிக்குள்ளாகி யிருப்பது மிகுந்த வேதனையளிக்கிறது.



தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை உள்ளிட்ட டெல்டா மாவட்டங்களில் குறுவை சாகுபடி சிறப்பாக நடைபெற்றுள்ளது. ஆனால், அறுவடையின் வேகத்திற்கு ஏற்ப அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்படாததால், விவசாயிகள் தங்களின் நெல் மூட்டைகளை திறந்தவெளியில் குவித்து வைத்திருக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர். மழை பெய்தால் நெல் நனைந்து தரம் குறைவதோடு, உழைப்பின் பலன் முழுமையாக வீணாகும் அபாயமும் ஏற்பட்டுள்ளது.

தற்போது தஞ்சாவூரில் 257, திருவாரூரில் 189, மயிலாடுதுறையில் 144, நாகப்பட்டினத்தில் 124 என மொத்தம் 714 அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. எனினும், அறுவடை செய்யப்படும் நெல்லின் அளவுக்கு இந்த எண்ணிக்கை போதுமானதாக இல்லை என்பது களத்தில் உள்ள விவசாயிகளின் ஒருமித்த கருத்தாகும். பல இடங்களில் 5 ஆயிரம் முதல் 10 ஆயிரம் நெல் மூட்டைகள் வரை கொள்முதல் செய்யப்படாமல் தேங்கிக் கிடப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

உழவரின் உழைப்பைப் பாதுகாப்பது அரசின் அடிப்படைப் பொறுப்பு. ஆனால், அறுவடை செய்த நெல்லை விற்பனை செய்ய முடியாமல் விவசாயிகள் பல நாட்கள் காத்திருக்க வேண்டிய நிலை தொடர்வது ஏற்றுக்கொள்ள முடியாதது. இந்த தாமதம் காரணமாக இடைத்தரகர்கள் குறைந்த விலைக்கு நெல்லை வாங்கி விவசாயி களை சுரண்டும் சூழல் உருவாகும் அபாயமும் நிலவுகிறது.

எனவே, தமிழ்நாடு அரசு உடனடியாக கூடுதல் அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையங்களை திறக்க வேண்டும். ஏற்கனவே செயல்பட்டு வரும் நிலையங்களில் போதுமான பணியாளர்கள், எடை இயந்திரங்கள், சாக்கு வசதிகள், சேமிப்புக் கிடங்குகள் மற்றும் போக்குவரத்து வசதிகளை உடனடியாக ஏற்படுத்த வேண்டும்.

மேலும், தேங்கிக் கிடக்கும் அனைத்து நெல் மூட்டைகளையும் போர்க்கால அடிப்படையில் விரைந்து கொள்முதல் செய்து, விவசாயிகளுக்கான தொகையை தாமதமின்றி அவர்களின் வங்கிக் கணக்கில் வழங்க வேண்டும்.

காவிரி டெல்டா விவசாயிகளின் நலனைக் கருத்தில் கொண்டு, குறுவை நெல் கொள்முதல் பணிகளை முழு வீச்சில் மேற்கொண்டு, எந்த விவசாயி யும் பாதிக்கப்படாத வகையில் தமிழ்நாடு அரசு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மனிதநேய மக்கள் கட்சி வலியுறுத்துகிறது என்று மனிதநேய மக்கள் கட்சித் தலைவர் எம்.எச்.ஜவாஹிருல்லா விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

---

விவசாயிகளுக்கு கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றாவிட்டால்

# மாபெரும் அறவழிப் போராட்டங்கள் முன்னெடுக்கப்படும்!

## திருவாரூரில் பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ. எச்சரிக்கை!

திருவாரூர்,ஜூன்26.

தேர்தல் நேரத்தில் த.வெ.க. தலைமை, மக்களை ஏமாற்றும் வகையில் விவசாயிகளின் கூட்டுறவு கடன்களை முழுமையாக தள்ளுபடி செய்வோம் என்கிற வாக்குறுதியை கொடுத்துவிட்டு, ஆட்சிப்பொறுப்புக்கு வந்ததும் விவசாயி களை வஞ்சித்து விவசாய கடனை தள்ளுபடி செய்வதில் குழப்பங்களை ஏற்படுத்தி ஏமாற்றும் விஜய் தலைமையிலான தவெக அரசை கண்டித்து திருவாரூரில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

திருவாரூர் மாவட்ட விவசாய அணி, விவசாய தொழிலாளர் அணி மற்றும் அனைத்து அரசியல் சார்பற்ற விவசாய சங்கங்கள் இணைந்து நடத்திய ஆர்ப்பாட்டத்திற்கு, மாவட்ட செயலாளர் பூண்டி. கே.கலைவாணன் எம்.எல்.ஏ. தலைமை ஏற்றார். விவசாய சங்கங்களின் நிர்வாகிகள் சத்யநாராயணன், முகமது ரபீக், சந்திரசேகரன், விவசாய அணி மற்றும் விவசாய தொழிலாளர் அணி அமைப்பாளர்கள் குன்னலூர் அன்பழகன், ஜானகிராமன் உள்ளிட்டோர் முன்னிலை ஏற்றனர்.



ஆர்ப்பாட்டத்தில் பேசிய மாவட்ட செயலாளர் பூண்டி. கே. கலைவாணன் எம்.எல்.ஏ., ”சிறுபிள்ளைகளிடம் கொடுத்த வேளாண்மை வீடு வந்து சேராது என்கிற பழமொழிக்கு ஏற்றார்போல எதிலும் அனுபவம் இல்லாத இந்த தவெக ஆட்சியில் வேளாண்மையே செய்யவே வழி இன்றி போய்விட்டது. முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களும் திராவிட நாயகர் தளபதி அவர்களும் மக்களுக்கு கொடுத்த வாக்குறுதிகளின்படி எந்த வித நிபந்தனை களையும் விதிக்காமல் கடன்களை முழுமையாக தள்ளுபடி செய்து விவசாயத்தை வாழ வைத்தார்கள்.

ஆனால் த.வெ.க. அரசு தாங்கள் கொடுத்த வாக்குறுதிகளின்படி கடனை தள்ளுபடி செய்யாமல் பல்வேறு தேவையற்ற நிபந்தனைகளை விதித்து அந்த தள்ளுபடி விவசாயிகளுக்கு முற்றிலும் பயனற்ற தாக்கி ஒட்டுமொத்த விவசாய குடும்பங்களையும், விவசாயத்தையும் பாழ்படுத்திவிட்டது.

தி.மு.க. ஆட்சிகளின்போதெல்லாம் ஒவ்வொரு ஆண்டும் ஜூன் 12 மேட்டூர் அணை திறக்கப்பட்ட தால் வேளாண்மையை செழிக்க வைத்தது. ஆனால் ”அடுத்த பிறவியில் நான் விவசாய குடும்பத்தில் பிறக்க ஆசைப்படுகிறேன் என்று மேடையில் பேசி ஏமாற்றிய விஜய் இந்த பிறவியிலேயே விவசாயத்தை பாழ்படுத்திக்கொண்டிருக்கிறார்.

ரேஷன் கார்டில் உள்ள ஒருவருக்கு மட்டுமே கடன் தள்ளுபடி, கூட்டுறவு சங்கங்களில் பொறுப்பில் உள்ளவர், கூட்டுறவு வங்கிகளில் பணிபுரிபவர்கள் ஆகி யோருக்கு தள்ளுபடி இல்லை என்கிற தவெக அரசின் அறிவிப்பால் கடன் வாங்கி விவசாயம் செய்யும் பலர் இப்போது தவித்து வருகிறார்கள்.

த.வெ.க. அரசு உடனடியாக விவசாய கடனை முழுமையாக தள்ளுபடி செய்யவேண்டும், குறுவை பொய்த்து பாதிக்கப்பட்டவர்களுக்கு 15000 ரூபாய் இழப்பீடு வழங்க வேண்டும், விவசாய தொழிலாளர் குடும்பங்களுக்கு 10000 ரூபாய் வழங்கிடவேண்டும், பாதிக்கப்பட்ட பருத்தி விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்கவேண்டும், மேகதாதுவில் அணைக்கட்டுவதற்கு கண்டனத்தை தெரிவித்து தடுக்க வேண்டும் ,

ஆனால் அதனை செய்யாமல் இப்படி விவசாயிகளுக்கும் விவசாய தொழிலாளர்களுக்கும் வஞ்சகங்களை மட்டுமே கொடுக்கும் த.வெ.க. அரசு தொடர்ந்தால் கழக தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதல்களின்படி மிகப்பெரிய அளவுக்கு அறப்போர் போராட்டங்களை முன்னெடுப்போம் என குறிப்பிட்டு மாவட்ட செயலாளர் பூண்டி. கே. கலைவாணன் எம்.எல்.ஏ. பேசினார்.

இந்த மாபெரும் ஆர்ப்பாட்டத்தில் விவசாய அணி மாவட்டக் கழக நிர்வாகிகளும் கழக நிர்வாகிகளும் மற்றும் விவசாயிகளும்,விவசாய தொழிலாளர்களும், அரசியல் சார்பற்ற விவசாய பெருங்குடி மக்களும், விவசாய ஆர்வலர்களும், ஏராளமான பொதுமக்களும் பெருந்திரளாக பங்கேற்றனர்.

ஆர்ப்பாட்டத்தின் முடிவில் விவசாய அணி மாநில செயலாளர் ஏ.கே. எஸ். விஜயன் அவர்களின் தாயார் மறைந்த சுப்பம்மாள், விவசாய அணி மாவட்ட அமைப்பாளர் மறைந்த வீரா.தேசபந்து ஆகியோருக்கு மௌன அஞ்சலி செலுத்தப் பட்டது.

---

விவசாயிகளின் வாழ்வாதாரம் கேள்விக்குறி!

# சினிமா வியாபாரம் பார்க்கும் சுயநலக் கோழைகள்!

## தி.மு.க. ஐ.டி.விங் விமர்சனம்!

சென்னை, ஜுலை 26-

விவசாயிகளின் வாழ்வாதாரம், போதிய நீர் இல்லாததால் கேள்விக் குறியாக இருக்கும் இந்த நேரத்தில் முதலமைச்சரும், தொடர்புடைய அமைச்சர்களும் ‘ஜனநாயகன்’ திரைப்படத்திற்கு விளம்பரம் தேடும் சுயநலக் கோழைகளாக இருப்பதாக தி.மு.கழக ஐ.டி. விங் விமர்சித்துள்ளது.

தி.மு.க. ஐ.டி.விங் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:-

உச்ச நீதிமன்றத் தீர்ப்பை அப்பட்டமாக மீறி, தமிழகத்திற்குச் சேர வேண்டிய காவிரி நீரைத் தர மறுக்கும் கர்நாடக அரசின் அடாவடித்தனத்தால், ஜுன் மாதம் வர வேண்டிய 9.19 TMC நீரில் கிடைத்ததோ வெறும் 2.915 TMC தான். ஜுலை மாதம் வர வேண்டிய 31.24 TMC க்கு பதிலாகக் கர்நாடகா தந்ததோ வெறும் 0.459 TMC தான்.




டெல்டா விவசாயிகள் கண்ணீர் வடித்துக் கொண்டிருக்கும் இந்த வேளையில், தமிழ்நாட்டின் உரிமையைக் கேட்க வேண்டிய முதலமைச்சர் விஜய்யும், நீர்வளத் துறை அமைச்சர் ஆனந்தும், விவசாயத் துறை அமைச்சர் வினோத்தும், தங்கள் ஆட்சியை காக்க கூட்டணியில் உள்ளார்கள் என்ற காரணத்தாலும், தங்கள் சீட்டை பாதுகாக்கவும், கர்நாடக காங்கிரஸ் அரசை எதிர்த்துக் கேள்வி கேட்கத் துணிவில்லாமல் பொம்மை போலப் பதுங்குகிறார்கள்!

காவிரி உரிமைக்காகக் குரல் கொடுக்க வேண்டிய இந்த மூன்று அமைச்சர்களும், முதலமைச்சரும் தங்கள் ‘ஜனநாயகன்’ திரைப்படத்தைத் தியேட்டர்களில் உட்கார்ந்து ரசிப்பதிலும், படத்திற்குப் ப்ரோமோஷன் தேடுவதிலுமே பிஸியாக இருக்கிறார்கள்!

இவ்வாறு தி.மு.க. ஐ.டி.விங் தெரிவித்துள்ளது.